**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4077

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 27.04.2021

Accepted: 02.06.2021

Published: 01.07.2021

Citation:
Agilan, Dhilip Kumar. "Animism in Folk Deities Cult in Malaysia." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 67–73.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4077

*Corresponding Author:
dhilipchandrusp@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Animism in Folk Deities Cult in Malaysia

**Dhilip Kumar Agilan**
*Language And Communication Faculty*
*Sultan Idris Educational University, Tanjung Malim, Perak*
http://orcid.org/0000-0002-0039-4594

**Abstract -** Folk deities cult began in Malaysia when Tamils were brought by the British to work in the rubber plantation. Tamils brought a handful of soil, spears, and trident as depictions of their ideal deities. Tamils tend to builts shrines for the deities in Malaysia around their residents, within house compounds, and at the center of rubber plantations. These folk deities cult contains a massive number of animism in its cult. Animism in Malaysian folk deities cult can categorize as animals cult, weapons cult, and trees cult. This article founds that Malaysia Tamils still follow animism in their folk deities cult until today.

**Key Words:** Folk Deities, Malaysia, Tamils, Animism, Shrines, Cult

**References**

1. http://aayvagam.journal.thamizhagam.net/issues/2013/April%202013/3%20Article%20April%202013.pdf.
2. (The History of Tamil Religion: A General View). Journal of Indian Studies, 12, 73-81. https://ejournal.um.edu.my/index.php/JIS/article/view/24897
3. (Temple Worships and Festivals of Perungulam Village – A Special Study). http://ijtlls.com/data/uploads/january-2020/16.-a.-radha.pdf
4. (Origin and the Development of Family Deity Worship Among Malaysian Tamils). Journal Of Tamil Peraivu, 4(1), 40-50. https://tamilperaivu.um.edu.my/article/view/14137
5. KhairulnazrinNasir&Muhammad SyafeeSalihinHasan. (2018). Kepercayaananimisme
6. Menurutperspektif Al-Quran. JurnalPengajian Islam, 11(2), 80-93. http://journal.kuis.edu.my/e-jurnal-pengajian-islam/wpcontent/uploads/2019/01/11_II.06.pdf
7. Shazlin, A &Salmah, J,N,M. (2020). Methodology of Application of Shamanic Practice in Malay Community. International Journal of Academic Research in Business and Social Sciences, 10(4), 254–261. https://www.researchgate.net/publication/343674068_Methodology_of_Application_of_Shamanic_Practice_in_Malay_Community https://shodhganga.inflibnet.ac.in/handle/10603/265197
8. Muhammad Sandi Rosyadi.(2020). PengaruhAnimisme: HilangnyaKaharingandalam pilihan agama di Indonesia. Al Qalam: JurnalIlmiahKeagamaandanKemasyarakatan, 14(2), 208-216. file:///C:/Users/HP/Downloads/398-1068-1-PB%20(1).pdf
9. Shannal,R&Raisuyah,B.(2020). Honoring Tribal Spirituality in India: An Exploratory Study of Their Beliefs, Rituals and Healing Practices. Religions,11,1-16. file:///C:/Users/HP/Downloads/religions-11-00549%20(1).pdf
10. Muhammad Sandi Rosyadi.(2020). PengaruhAnimisme: HilangnyaKaharingandalam pilihan agama di Indonesia. Al Qalam: JurnalIlmiahKeagamaandanKemasyarakatan, 14(2), 208-216. file:///C:/Users/HP/Downloads/398-1068-1-PB%20(1).pdf
11. Contemporaneity of Language and Literature in the RobotizedMillennium, 1(3), 1-4. http://restpublisher.com/wp-content/uploads/2019/10/1-
12. http://www.shanlaxjournals.in/pdf/TS/V3N4/ts_v3_n4_018.pdf

13. https://mjsshonline.com/index.php/journal/article/view/183/132
14. Mathavi, A., &Lydon, N. (2017).MaknaSimbolKuilSaivismDalamKalangan Hindu, India: SatuKajianKes Di Kuil-Nagamma, Bangi, Selangor. JurnalWacanaSarjana, 1(1). Retrieved from http://spaj.ukm.my/jws/index.php/jws/article/view/49
15. Kingston,P.T, Kartheges,P.,Saravanakumar,A.R&Ilankumaran.(2020). Folk Religion Based on Malaysian Tamil Folk Songs.Journal of Xidian University, 7(14), 734-738. Retrieved from file:///C:/Users/HP/Downloads/2020ScopusXidianKingston.pdf.
16. Wincen, F, H, K &Perline S, H, L. (2019). Animism Belief that Worships the Tree in Malaysia.The Asian Conference on Cultural Studies 2019-Official Conference Proceedings. Retrieved from http://25qt511nswfi49iayd31ch80-wpengine.netdna-ssl.com/wp-content/uploads/papers/accs2019/ACCS2019_52095.pdf
17. (The Glory of Maran Sri Marathandavar Temple). Journal of Tamil Peraivu,7(2),125-131. https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/article/view/15517

# மலேசியச் சிறுதெய்வ வழிபாடுகளில் உயிர்ப்பாற்றல்

***திலிப்குமார் அகிலன்***
முதுகலைப்பட்ட மாணவர்
மொழி மற்றும் தொடர்பாடல் புலம்
சுல்தான் இத்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்
தஞ்சோங் மாலிம், பேராக்

**ஆய்வுசுருக்கம்**

*மலேசியாவில் சிறுதெய்வ வழிபாடு மலேசியாவிற்கு ஆங்கிலேயர்களால் தமிழர்கள் கொண்டு வரப்பட்டதிலிருந்து தொடங்குகிறது. தமிழர்கள் பிடிமண், வேல், சூலம் ஆகிய வடிவங்களில் தங்களின் சிறுதெய்வங்களை மலேசியாவிற்கு கொண்டு வந்துள்ளனர். தமிழர்கள் அவர்களின் வாழ்விடங்கள் மற்றும் இரப்பர் தோட்டங்களை ஒட்டி தங்களின் சிறுதெய்வ ஆலயங்களை அமைத்துக் கொண்டுள்ளனர். இந்தச் சிறுதெய்வ வழிபாடு மிகுந்த உயிர்ப்பாற்றல் அம்சங்களைக் கொண்டதாகும். மலேசியச் சிறுதெய்வ வழிபாட்டில் உள்ள உயிர்ப்பாற்றல் கூறுகள் விலங்கு வழிபாடு, ஆயுத வழிபாடு, மர வழிபாடு ஆகியவற்றில் அடங்குகிறது. இந்தக் கட்டுரை இன்று வரை மலேசியர்களின் மத்தியில் காணப்படும் சிறுதெய்வ வழிபாடுகளிலுள்ள உயிர்ப்பாற்றல் கூறுகளை ஆய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

***முதன்மைச் சொற்கள்:*** *சிறுதெய்வம், மலேசியா, தமிழர்கள், உயிர்ப்பாற்றல், ஆலயம், வழிபாடு*

## முன்னுரை

தன்னைவிட உயர்ந்தது, ஆற்றல் மிக்கது என்று நம்பியவற்றை மனிதன் வணங்கத் தொடங்கினான். ஆக, முதலில் வழிபடுதல் எனும் செயற்பாங்கு தோன்றியது. மனிதன் இயற்கையின் முழுமுதல் ஆற்றலை அறியாத வேளையில் அவற்றின் சீற்றங்களையும் ஆற்றல்களையும் கண்டு அஞ்சினான். அவ்வாறு அஞ்சியதன் விளைவாக அவற்றை வணங்கி நலம் பெற முயன்றான் (கண்ணதாசன், 2013). முதலில் இயற்கை வழிபாடாகத் தோன்றியது படிப்படியாகத் தமிழர்தம் வாழ்வில் சிறுதெய்வ வழிபாடாக வளர்ந்தது (சீதாலட்சுமி, 2020). தமிழ்ச்சமூகத்தில் பெரும்பாலான மக்களால் வழிபடும் தெய்வங்களாக சிறுதெய்வங்கள் விளங்குகின்றன (ராதா பரந்தாமன், 2020). இந்தச் சிறுதெய்வங்கள் தமிழ்மக்கள் மலேசியாவிற்கு சஞ்சிக்கூலிகளாக வந்தபொழுது உடன் கொண்டு வரப்பட்டு வழிபடப்பட்டன. அதன் பொருட்டு, இங்கே பல சிறுதெய்வ ஆலயங்கள் தோன்றின (மணிமாறன், 2016). அவ்வகையில், மலேசியாவில் சிறுதெய்வ வழிபாடுகளில் காணப்படும் உயிர்ப்பாற்றல் கூறுகளை ஆய்வதை இந்தக் கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உயிர்ப்பாற்றல்

மாந்தவியலாளர்கள் உயிர்ப்பாற்றல் முற்கால அல்லது பழமையான மக்களின் நம்பிக்கைகளைக் குறிக்கிறது என்கிறார்கள். இந்த உயிர்ப்பாற்றல் என்பதின் பொருளை மேலும் விளக்கும்போது அது லத்தின் மொழியிலுள்ள "animaus" அல்லது "anima" என்ற பதங்களிலிருந்து பிறந்தது என்று கூறுகிறார்கள். இது ஆன்மா, ஆவி அல்லது வாழ்க்கை என்ற பொருள்களை உடையதாகும் (கைருல் நஸ்ரின், 2016). இந்த விளக்கப்பாடு

சொற்பிறப்பியல் விளக்கப்பாடாகும். துறைசார் அடிப்படையில் நோக்கும்பொழுது, இது இந்த உலகத்தில் உருவெடுக்கும் கல், கட்டை, காற்று மற்றும் ஏனைய எல்லா பொருள்களுக்கும் ஆன்மா அல்லது ஆவி உள்ளது என்று வழங்குகிறது.

உயிர்ப்பாற்றல் என்பது கண்ணுக்குப் புலப்படாத ஆற்றல், தீயச்சக்தி, மூட நம்பிக்கை, மந்திரம் ஆகியவற்றை நம்புதாகும். இந்த உயிர்ப்பாற்றல் என்பது மனிதர்களிடமிருந்து சுதந்திரமான போக்கு உடையதாயினும் அது அவர்களுடைய அன்றாட வாழ்விலும் அவர்களது நடவடிக்கைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் தன்மையுடையதாகும். உயிர்ப்பாற்றல் நம்பிக்கையுடையவர்கள் ஆன்மவாதிகள் (Animist) என்று அழைக்கப்படுகிறார்கள்.

உயிர்ப்பாற்றல் என்பது ஆவி அல்லது ஆற்றலுடைய ஒன்றைக் குறிக்கும் கோட்பாடாகும் மேலும், இது இரண்டு வடிவங்களில் உயிருள்ள பொருட்களின் மீதுள்ள நம்பிக்கைகளை உள்ளடக்கியிருக்கிறது. முதலாவதாக, மனிதர்கள் இறந்தாலும் அவர்களுக்கு நிலையான ஆன்மா உள்ளது என்பதாகும். இவ்வகையான ஆன்மாக்கள் மனிதர்களைத் தொந்தரவு செய்யாமல் இருக்கவும் அன்றாட வாழ்வில் மனிதர்களுக்கு உதவவும் மதிக்கப்பட வேண்டும் (கவிதா, 2011). முகமது சண்டி ரோசியாடி (2020), ககரிங்கான் (Kahringan) எனும் டாயாக் இனமக்களின் உயிர்ப்பாற்றல் நம்பிக்கையின்படி இறந்தவருடைய ஆன்மாக்கள் நேரடியாக வானுக்குப் போகாமல் மக்களுக்கு மத்தியேலே இருந்து அவர்களுடைய வாழ்வில் தாக்கங்க்ளை ஏற்படுத்துகின்றன என்று குறிப்பிட்டுள்ளார். இரண்டாவதாக, ஏனைய பொருட்களுக்கும் ஆன்மா உள்ளது என்பதாகும். இதன்வழி, உலகிலுள்ள உயிரற்ற பொருட்களாகக் கருதப்படுபவைகளுக்கும் ஆன்மா உள்ளதென்றும், அவை மனிதர்களின் வாழ்வில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பது புலனாகிறது.

உயிர்ப்பாற்றல் உலகில் மனிதர்கள் ஏறக்குறைய விலங்குகள், தாவரங்கள், அதோடு ஏனைய இயற்கை பொருட்களுக்கு இணையான தகுதியுடையவர்களாகக் கருதப்படுகிறார்கள் (சன்னல் ரௌகித், ரைசுயா பகவான், 2020). எனவே, இத்தகைய கூறுகளோடு உறவாடுவதும் மதிப்பதும் உயிர்ப்பாற்றாலர்களின் முக்கிய கடமையாகக் கருதப்படுகிறது. மிகுந்த ஆற்றலுடைய ஆன்மாக்களை போற்றி வழிபடும்போது அவற்றின் கோபங்களிலிருந்து தப்பிக்கவும், அவை மகிழ்ந்தால் மிகுந்த செல்வங்களைப் பெற முடியும் என்றும் நம்பப்படுகிறது (ஜெயபார்வதி, 2019). எனவே, உயிர்ப்பாற்றல் என்பது உயிருள்ளவைகளான மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், உயிரற்றவைகளான கல், இரும்பு, பல்வேறு புவி நில வகைகளான மலை, குன்று, பாலை, பள்ளத்தாக்குகள், காடுகள், குகை, கடல் அல்லது இயற்கை நிகழ்வுகளான இடி, வறட்சி, மழை ஆகியவற்றிற்கு ஆற்றல் அல்லது ஆன்மிகத்தன்மை உள்ளது என்று நம்புவதாகும் என்று புலனாகிறது (கலாமணி, 2019). அதன் பொருட்டு, மலேசியச் சிறுதெய்வ வழிபாடுகளில் ஆரம்பக்காலம் தொட்டு தற்காலம் வரை நீடித்து வரும் உயிர்ப்பாற்றல் கூறுகளைப் பதிவுச்செய்வது முக்கியமாகும்.

**மலேசிய ஆரம்பக்கால சிறுதெய்வ வழிபாடுகளில் உயிர்ப்பாற்றல்**

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் தொழிலாளிகளாக மலையகத்திற்கு வந்தத் தமிழர்கள் தங்களின் பரம்பரை வழிவந்த தெய்வங்களை இங்கே வழிபட முனைந்ததோடு அத்தெய்வத்தோடு சார்ந்த வழிபாட்டு முறைகளையும் இங்கே கடைப்பிடித்தனர். மேலும், ஆரம்பக்காலத்தில் தாங்கள் வந்த கிராமத்திலிருந்த ஆலயங்களிலிருந்து

கொண்டு வந்த பிடிமண்ணைக் கொண்டு இங்கு ஆலயங்களை நிறுவியுள்ளனர். பிடிமண்ணோடு சிலர் வேல், திரிசூலம் ஆகியவற்றோடு ஏனைய வழிபாட்டுப் பொருட்களையும் உடன் கொண்டு வந்து அதையும் வழிபட்டுள்ளனர். இவ்வாறு முதற்கட்டத்தில் அமைந்த ஆலயங்களே பின்னாளில் தோட்டப்புற மக்களுக்கு முறையான பூசைகளை ஏற்கும் ஆகம, சாத்திர விதிகளுக்கு உட்பட்ட ஆலயங்களை நிறுவுவதற்கு வழிக்கோலின (மணிமாறன், 2016 ).

தோட்டப்பின்னணியை அடிப்படையாகக் கொண்டே மலேசியத் தமிழர்களின் வாழ்க்கை முறை இருந்தமையால், அவர்கள் வழிபாட்டிற்குரிய தெய்வங்களான முருகன், சிவன், பிள்ளையார் என்பவற்றோடு மாரியம்மன், காளியம்மன், மதுரை வீரன், முனீஸ்வரன் போன்ற காவல் தெய்வங்களையும் பரிவாரத் தெய்வங்களையும் தங்கள் வாழ்விடம், வாழ்விட எல்லைகள், பணியிடங்கள், அதோடு தேவைக்குட்ப்பட்ட இடங்களில் ஆங்காங்கே அமைத்துக்கொண்டு வழிபட முயன்றனர். இக்காவல் பரிவாரத் தெய்வங்கள் அவர்களின் குலத் தெய்வங்களாகவும் கருதப்பட்டன.

அக்காலக்கட்டத்தில் முச்சந்தியிலும் மரங்களிலும் சாலை ஓரங்களிலும் காட்டுப் பகுதிகளிலும் பலதரப்பட்ட வழிபாட்டுச் சின்னங்களான வேல், திரிசூலம், செங்கல், வாள் போன்றவற்றை ஊன்றியும், சிகப்பு, மஞ்சள் துணிகளை மரங்களில் கட்டியும் வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். இது குறிப்பாகத் தோட்டங்களில் வாழ்ந்த மக்கள் தங்களின் பாதுகாப்புக்காக வேண்டி செய்யப்பட்ட செயலாகும் (குணசேகரன் சற்குணவதி, 2020). அதுமட்டுமின்றி, சிலர் சுதைச்சிற்பங்களையும், சுண்ணாம்புச் சிலைகளையும், மரச்சிலைகளையும் மற்றும் களிமண் சிற்பங்களையும் வழிபாட்டு நோக்கத்திற்காகப் பயன்படுத்தி வந்துள்ளனர். இதன் காரணமாக அக்கால ஆங்கிலேய ஆட்சியாளர்கள், தோட்டப்புற மேலாளர்களாகவும் உரிமையாளர்களாகவும் இருந்தமையால் தோட்டத்து மக்கள் வழிபடுவதற்கான ஆலயங்களையும் குலதெய்வ வழிபாடுகளைச் சுதந்திரமாகச் செய்வதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டத் தோட்டத்துத் தமிழர்கள் தங்களுடைய வழிபாடுகளைச் சுதந்திரமாக எவ்வித இடையூறுமின்றி செய்யலாகினர்.

இவ்வழிபாடுகளில் காவல் தெய்வங்களுக்கு விலங்குகளைப் பலியிடும் வழக்கம் நிலவி வந்துள்ளது. அதோடு, மது, சுருட்டு, கருவாடு, சமைத்த மாமிச உணவுகளையும் அத்தெய்வங்களுக்குப் படைத்து உறுமி, பம்பை, உடுக்கை போன்ற வாத்தியங்களையும் இசைத்து வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர் (மணிமாறன், 2016). 1960 தொடங்கி 1990 வரை தோட்டப்புறத் தமிழர்கள் எண்ணற்ற காரணங்களுக்காகப் பட்டணங்களில் குடியேறத் தொடங்கியப்போது இவ்வழிபாடுகள் அதன் நீட்சியை நிலைநிறுத்திக் கொண்டன.

அதன் வகையில், மலேசியத் தமிழர்களின் ஆரம்பக்காலச் சிறுதெய்வ வழிபாடுகள் ஆயுதங்கள், மரங்கள், மண், கல் போன்ற முறைகளில் உயிர்ப்பாற்றலோடுத் தொடர்புடையதாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

### மலேசியத் தற்கால சிறுதெய்வ வழிபாடுகளில் உயிர்ப்பாற்றல்

மலேசியத் தமிழர்கள் இன்றளவிலும் தங்களின் சிறுதெய்வ வழிபாடுகளில் உயிர்ப்பாற்றலைக் கொண்டுள்ளனர். மலேசியத் தமிழர்கள் மதுரை வீரனுக்கு அருகில் குதிரை, நாய் போன்ற விலங்குகளையும், பாம்பு புற்றுகளில் முட்டை, பால்

போன்றவற்றை வைத்தும் இன்னும் வழிபாடு செய்து வருகின்றனர் (குணசேகரன் சற்குணவதி, 2020). அதுமட்டுமல்லாது, இந்திய இந்து மக்களிடையே காணப்படும் சைவ ஆலயக் குறியீடுகள்: சிலாங்கூர், பாங்கியிலுள்ள நாகம்மன் கோவிலில் கள ஆய்வு எனும் கட்டுரையில், பாங்கி நாகம்மன் கோவிலில் இன்னமும் வழிபாட்டில் இருக்கும் பாம்புப் புற்றுக் குறித்த தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. நிறைய ஆலயங்களில் அரசமரத்தின் கீழேயும், பிள்ளையார் அருகினிலும் நாகர் சிலைகள் வைக்கப்பட்டு வழிபாட்டில் உள்ளன.

கிங்ஸடன் பால் தம்புராஜ், கார்த் திகேசு, இளங்குமரன் சரவணக்குமார் (2020), முருக வழிபாட்டை மலேசியத் தமிழர்களின் சிறுதெய்வ வழிபாடுகளுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த முருக வழிபாட்டில் மலேசியாவில் இன்னமும் சில உயிர்ப்பாற்றல் கூறுகள் காணப்படுகின்றன. வின்சன் பெர்லின்,(2019),பத்துமலையில் காணப்படும் மரம் அதற்குக் கீழுள்ள நாகராஜோடு இயைந்துள்ளது என்று வழங்கியுள்ளனர். இது மர வழிபாடு என்பதோடு மலேசியத் தமிழர்கள் மத்தியில் காணப்படும் நாக வழிபாட்டினையும் சுட்டி நிற்கிறது. அதோடு, மாரான் மரத்தாண்டவர் ஆலயத்தில் உருத்திராட்ச மரம் இன்னும் வழிபாட்டில் உள்ளதும் உயிர்ப்பாற்றல் வழிபாட்டின் நீட்சியே ஆகும்.

செந்தூல் காளியம்மன் வழிபாடு எனும் ஆய்வுக்கட்டுரையில், கோலாலம்பூரிலுள்ள செந்தூல் வட்டாரத்தில் அமைந்துள்ள காளியம்மன் ஆலயத்தில், காளியம்மனுக்குப் பின்புறத்தில் ஆலமரமும் அரசமரமும் வழிபாட்டில் உள்ளது குறிக்கப்பட்டுள்ளது. அதோடு அவ்வாலயத்தில் முகப்பில் வேப்பமரம் ஒன்றும் வழிபாட்டில் உள்ளது. அந்த வேப்பமரத்தில் மக்கள் சிகப்பு, மஞ்சள் துணிகளைக் கட்டி வேண்டுதல்களை நிறைவேற்றுவதும் அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முடிவுரை

மலேசியாவில் இன்றளவும் சிறுதெய்வ வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. சிறுதெய்வ வழிபாடுகளில் உயிர்ப்பாற்றல் எனப்படுவது நீடு நிலவி வருகின்றது. அது விலங்கு, மரம், ஆயுதம், புற்று ஆகிய அடிப்படையில் அமைந்துள்ளன.

## மேற்கோள்


1. கண்ணதாசன், ந. (2013). நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளும். ஆய்வகம்: பல் துறைகளுக்கானப் பன்னாட்டு ஆய்விதழ், 3(1), 15-17.
2. சீதாலட்சுமி, இரா. (2020). தமிழர் சமய வரலாறு: ஒருபொதுப்பார்வை (இந்தியஆய்விதழ்),12, 73-81.
3. ராதா, பரந்தாமன், கா. (2020). பெருங்குளம் கிராமப்புறக் கோயில் வழிபாடும் மற்றும் திருவிழாக்களும்- ஒரு சிறப்புப் பார்வை தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், 2(2), 122-129.
4. மணிமாறன், சு., சிவபாலன், கோ., இராசேந்திரன், மு.(2016).
5. கவிதா, து. (2011).தேனி வட்டாரச் சிறுதெய்வ வழிபாடு (முனைவர் பட்ட ஆய்வு, அன்னை தெரச ாமகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல், இந்தியா).
6. ஜெயபார்வதி, வ. (2019). சு. தமிழ்ச்ஜெல்வியின் புதினங்களில் வழிபாடு.
7. கலாமணி, ம.(2019). சங்கக்காலத் தமிழர்களின் வாழ்க்கை முறை-ஓர்

ஆய்வு. சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், *3(4), 105-108.*

8. குணசேகரன், குசற்குணவதி. (2020). சிலப்பதிகாரக் காப்பியத் தெய்வத் தொடர்புடைய கூறுகளை மலேசியா இந்திய சமூகத்தோடு ஓர் ஆய்வு. முவாலிலிம் சமூக அறிவியல் மற்றும் மாந்தவியல் ஆய்வேடு, *3 (4), 157-172.*

9. சில்லாழி கந்தசாமிசர்மிளா,ச. (2018) மாரான் ஸ்ரீமரத்தாண்டவர் கோயிலின்மகிமை

10. திலிப்குமார், அ வைஷ்ணவி, வ. (2021). செந்தூரல் காளியம்மன் வழிபாடு. முவாலிலிம் சமூக அறிவியல் மற்றும் மாந்தவியல் ஆய்வேடு, *5 (2), 165-175.*